1980 ஜூலை 4] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

100 ரூபாய் கொடுத்து வந்ததை 200 ரூபாயாக உயர்த்தி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அன்றையதினம் 50 ரூபாய் தான் கொடுத்து வந்தார்கள். அதனால் அந்தக் குடிசைவாசிகள் ஒன்றும் செய்ய முடியாத நிலைதான் இருந்து வந்தது. ஏழைத் தொழிலாளர்கள் வீடு கட்ட வேண்டுமென்றால் ஒன்றரை சென்ட் நிலம் இருந்தால்தான் லோன் தரப்படும் என்பதை மாற்றி ஒரு சென்ட் இருந்தாலும் நிலம் தரும் திட்டத்தைக் கொண்டுவர அரசு பரிசீலிக்க வேண்டும். அரிசனங்கள், பிற்பட்ட மக்களுக்கு நிலம் இல்லையென்று சொன்னாலும் ஆங்காங்கு இருக்கின்ற நிலங்களை ஆர்ஜிதம் செய்து அங்கிருப்பவர்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்கித் தரவேண்டுமென்று சொல்லி வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-இன் கீழ் நான் அளித்த அறிக்கையில் உயர் அழுத்த தொழில்களுக்கு மின் தேவையில் 20 சதவிகிதம் வெட்டு என்றும், மின் சக்தியில் 15 சதவிகிதம் வெட்டு என்றும் குறைக்கப்படுகின்றது என அறிவித்தேன். அதைத் திருத்தி, மின் தேவையில் 20 சதவிகிதம் வெட்டு என்றும், மின் சக்தியில் வெட்டு இல்லையென்றும் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உயர் அழுத்தத்தில் மின்சாரம் பெறும் மற்ற இணைப்புகளுக்கு மின் சக்திக்கான வெட்டு நீக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 5—7—1980 சனிக்கிழமை காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

25. சென்னையிலுள்ள, சோவியத் ஐக்கியக் குடியரசின் தொழிற்பிரதிநிதித்துவத்திற்குச் சொந்தமான டி. எம். இசட். 2994 ஆம் எண் மோட்டார் வண்டிக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 29—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 864 ஆம் எண்

அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தில் தொழில் நுட்பமல்லாத சார்நிலைப்பணி விதிகளில் உள்ள தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கும் முறை தொடர்பான விதிகளில் திருத்தம் ஒன்றும் செய்வது குறித்த வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1834 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

27. சென்னை வட்டாரத்திலுள்ள சர்ச்சஸ் ஆக்சிலரி பார் சோசியல் ஆக்ஷனுக்கு புயல் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகள் தொடர்பாக விற்பனை செய்யப்படுகிற கட்டுமானப்பொருள்கள் மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 28—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 278 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

28. கோயம்புத்தூர் மாவட்டம் போத்தனூரில் உள்ள பார்வையற்ற முதியோர் மறுவாழ்வு இல்லத்தில் தங்கி உள்ளவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 10—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 210 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*1. தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம் 1980-81 (ஆங்கிலம், தமிழ்).

*2. 1980-81 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (ஆங்கிலம், தமிழ்).